# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE (ECHO GROUP)

*India's National Spiritual Newspaper*

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Tamil | ₹ 10/-

Vol. XXVII | YEAR OF OUR LORD JESUS CHRIST, JULY 2022 | No. 7


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்.

**சங்கீதம் 30:1-10**

1. கர்த்தாவே, என் சத்துருக்கள் என்னை மேற்கொண்டு மகிழவொட்டாமல், நீர் என்னைக் கைதூக்கி எடுத்தபடியினால், நான் உம்மைப் போற்றுவேன்.
2. என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிட்டேன், என்னை நீர் குணமாக்கினீர்.
3. கர்த்தாவே, நீர் என் ஆத்துமாவைப் பாதாளத்திலிருந்து ஏறப்பண்ணி, நான் குழியில் இறங்காதபடி என்னை உயிரோடே காத்தீர்.
4. கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவரைக் கீர்த்தனம் பண்ணி, அவருடைய பரிசுத்தத்தின் நினைவு கூருதலைக் கொண்டாடுங்கள்.
5. அவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு; சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்.
6. நான் ஒருக்காலும் அசைக்கப்படுவதில்லையென்று, என் வாழ்விலே சொன்னேன்.
7. கர்த்தாவே, உம்முடைய தயவினால் நீர் என் பர்வதத்தைத் திடமாய் நிற்கப் பண்ணியிருந்தீர்; உமது முகத்தை நீர் மறைத்துக் கொண்டபோதோ நான் கலங்கினவனானேன்.
8. நான் குழியில் இறங்குகையில் என் இரத்தத்தால் என்ன லாபமுண்டு? புழுதி உம்மைத் துதித்து, உமது சத்தியத்தை அறிவிக்குமோ?
9. கர்த்தாவே, நீர் எனக்குச் செவி கொடுத்து, என்மேல் இரக்கமாயிரும்; கர்த்தாவே, நீர் எனக்குச் சகாயராயிரும் என்று சொல்லி;
10. கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிட்டேன்; கர்த்தரை நோக்கிக் கெஞ்சினேன்.

# நீங்கள் மேற்கொள்ளும் தீர்மானம் உங்கள் முடிவை நிர்ணயிக்கும்!

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்கள் தலைமைச் சபையில் அளித்த செய்தி)

இவ்வுலகில் வாழும் யாவருமே தங்கள் வாழ்க்கையில் உயர்வுகளையும், ஆசீர்வாதங்களையும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும், அவர்கள் மேலுள்ள தேவ அழைப்பும், வழி நடத்துதல்களும் வித்தியாசப்படுகின்றன. நாம் எந்த விதத்தில் அழைக்கப்பட்டாலும், ஏற்ற வேளையில் நாம் எடுக்கும் தீர்மானங்கள்தான் நம் வாழ்வின் முடிவை நிர்ணயிக்கும். உலகத்தில் வாழும் பலருடைய வாழ்க்கையைக் கவனிக்கும்போது இந்த உண்மை நன்கு புலனாகும்.

**பரிசுத்த வேதாகமத்தில் எலியா மற்றும் எலிசா என்னும் இரண்டு தீர்க்கதரிசிகளும், எலிசாவின் உதவியாளர் கேயாசியும் நல்ல முன் உதாரணங்களாகும்:**

## I. எலியா தீர்க்கதரிசி!

இவர் கிறிஸ்துவுக்கு முன் சுமார் 910 லிருந்து 896 ஆண்டுகளுக்குள் வாழ்ந்தார். இவர் தேவனால் முன் குறிக்கப்பட்டு, தேவனால் அழைக்கப்பட்ட தேவனுடைய தீர்க்கதரிசி ஆவார். இவருடைய பிறப்பைக் குறித்தோ, வேறு குடும்பப் பின்னணியைக் குறித்தோ வேதத்திலே எதுவும் சொல்லப்படவில்லை.

எலியா என்பதற்கு **யெகோவா என்னுடைய ஆண்டவர்** என்று அர்த்தம். எலியா தீர்க்கதரிசியினுடைய வாழ்க்கை முழுவதையும் பார்க்கும் போது ஆண்டவரே அவரை அழைத்தார்; ஆண்டவரே அவரைப் பரலோகத்திற்கு எடுத்துக் கொண்டார்; அவருக்குக் கல்லறை கிடையாது; அவருக்கு மரண சாசனம் கிடையாது; அவருக்கு அடக்க ஆராதனையும் கிடையாது; அவர் மயிர் உடையையும், அரையில் வார்க்கச்சையையும் கட்டியிருந்தார்; ஒரு சன்னியாசியாக அவர் வாழ்ந்தார்.

இப்படியாக, பரிசுத்தமான வாழ்க்கை வாழ்ந்த ஒரு மனுஷனை தேவன் கண்டுபிடித்தார். பார்வைக்கு அவர் ஒரு காட்டு மனிதரைப் போன்றவராயிருப்பினும், ஆண்டவருடைய சத்தத்துக்குத் தன்னுடைய செவிகளைச் சாய்த்த வேளையிலே அவருடைய கல்வியின் அடிப்படையையோ, பொருளாதாரத்தின் அடிப்படையையோ, குடும்பத்தின் சூழ்நிலைகளையோக் கருதாதபடி ஒரு வித்தியாசமான திட்டத்தை நிறைவேற்ற எலியாவை ஆண்டவர் தெரிந்தெடுத்தார்.

எலியா கீலேயாத் நாட்டிலே உள்ள திஸ்பி என்னும் ஊரைச் சேர்ந்தவர். ஆகாப், அகசியா என்னும் இஸ்ரவேல் ராஜாக்களின் காலத்தில் ஓர் உயர்ந்த, உன்னத தீர்க்கதரிசியாக வாழ்ந்தவர். "**உம்ரியின் குமாரனாகிய ஆகாப், தனக்கு முன்னிருந்த எல்லாரைப் பார்க்கிலும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் பாவங்களில் நடப்பது அவனுக்குக் கொஞ்சக்காரியமென்று நினைத்தாற்போல் அவன் சீதோனியரின்**

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)




## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...



### OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.

**CHIEF EDITOR**
Angeline Selvakumari Henry, M.A., M.Ed.

**MANAGING EDITOR**
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**ADMINISTRATION**
Bro. N. Prakasam, M.A., General Manager

**EDITORIAL BOARD**
Sis. Jesy Veena Sam
Bro. M. Paulraj, M.A., B.Ed.
Sis. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.

**EDITOR, PUBLISHER & PRINTER**
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 95661 31858

**E.mail ID**
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com

**YOUTUBE CHANNEL**
Echo of His Call

**"கர்த்தர் இரக்கமும் மனஉருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர்"**
**– சங்கீதம் 145:8**

*எனக்கு அன்பான சகோதர, சகோதரிகளே!*

*நமது ஆண்டவரும், இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் ஆசீர்வதிக்கப்பட்ட சிறந்த நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்!*

*நமது பல்வேறு ஊழியங்களிலும், ஊழியக்காரர்கள் மீதும் நீங்கள் காண்பிக்கும் அன்புக்கும், ஆதரவுக்கும் நாங்கள் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். உங்களின் அன்பின் செயல்களைப் பார்த்து நாங்கள் மிகவும் உற்சாகப்படுத்தப்படுகிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!*

*நமது நெகேமியா வேதாகமக் கல்லூரிகளின் தலைவர், போதகர் எம். முத்து அவர்கள் உடல்நலம் தேறிவருகிறார்கள். அவர்களுக்காக ஜெபித்துவரும் எல்லா நண்பர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து ஜெபியுங்கள்.*

*நீங்கள் அறிந்துள்ளபடி, இந்த நாட்களில்* **அழைப்பின் எதிரொலி** *பத்திரிகைகள்,* **நெகேமியா வேதாகமக் கல்லூரி***யின் ஹிந்தி, ஒடியா, தமிழ் மொழிப் பிரிவுகள்,* **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி** *மற்றும்* **சபைகள்** *ஆகிய ஊழியங்களை பெலப்படுத்தும் நடவடிக்கைகளில் நாங்கள் மிகவும் அதிகமாக ஈடுபட்டு வருகிறோம். எங்கள் எல்லா செயல்பாடுகளையும் தேவன் ஆசீர்வதித்து வருகிறார். சென்னைக்குள்ளும், வெளியேயும் இதினிமித்தம் நாங்கள் செய்யும் பிரயாணங்கள் எல்லாவற்றையும் தேவன் ஆசீர்வதித்து வருகிறார். இந்த மாதத்தில் அதிக பணி இருந்ததால்,* **ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு** *என்ற தலைப்பின்கீழ் வரும் நிகழ்வுகள் அடுத்த இதழில் தொடரும்.*

*மேலும் நமது அன்பு சகோதரனும்,* **அழைப்பின் எதிரொலி** *பத்திரிகையின் மூத்த துணை ஆசிரியருமாயிருந்த* **சகோ. மனுவேல் மு. பால்ராஜ்** *அவர்கள் மே 25, 2022 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அவர்களுடைய குடும்பத்தினருக்காகவும், நண்பர்களுக்காகவும் தயவாய் ஜெபியுங்கள். சகோதரர் அவர்கள் சுகவீனமாய் இருந்தபோது அவருக்காய் ஜெபித்த உங்களுக்கு நன்றியுள்ளவர்களாய் இருக்கிறோம்.*

*ஜூன் 3, 2022 அன்று* **நெகேமியா வேதாகமக் கல்லூரியின் 23வது பட்டமளிப்பு ஆராதனை** *தேவ கிருபையால் நடைபெற்றது. 23 மாணவர்கள் பட்டம் பெற்றார்கள். சுவிசேஷத்தால் சந்திக்கப்படாத இந்தியாவின் பகுதிகளிலே வைராக்கியமாய் மிஷனரி ஊழியம் செய்ய அவர்கள் வேறு பிரிக்கப்பட்டுள்ளனர்.*

*கர்த்தருடைய கிருபையினால், ஜூன் 6, 2022 அன்று, நாம் ஏற்கனவே திட்டம் செய்தது போல நமது* **நெகேமியா வேதாகமக் கல்லூரி** *(மாலை தமிழ் வழி வகுப்புகள் மற்றும் ஹிந்தி / ஒடியா மொழிகளில் கல்லூரியில் தங்கி பயிலும் வகுப்புகள்) திறக்கப்பட்டு வகுப்புகள் நல்ல விதத்தில் நடந்து வருகின்றன. ஜூன் 13, 2022 அன்று நமது* **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி***யும் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனங்கள் வெற்றிகரமாய் நடக்க தயவாய் ஜெபியுங்கள்.*

*நமது இணை ஊழியர்களின் குடும்பங்களில் சிலர் பெலவீனப்பட்டு இருப்பதால், கர்த்தர் அவர்களைத் தொட்டு சுகமளிக்கும்படிக்கு, உங்களது அதிகமான ஜெபங்கள் தேவை.*

*தேவ ராஜ்யத்தில் விரிவாக்கத்திற்கென்று செய்யப்படும் நமது பல்வேறு ஊழியங்களின் தேவைகளை மனதில் கொண்டு உங்கள் ஜெபங்களை ஏறெடுக்க தயவாய் வேண்டுகிறோம். உங்களை நாங்கள் கனிவுடன் நினைவு கூருகிறோம்.*

*வரும் நாட்களில் கர்த்தர் உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக.*

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,

**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் & அலெக்ஸ் சாம்சன் சாம்.**

(+91) 98412 71858 / 98410 71858, மின்னஞ்சல் : samselvaraj333@gmail.com

**Our Ministries:** ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) ☼ BIBLECOR - Postal Courses (3 languages) ☼ Online Courses ☼ Theological Correspondence Courses (2 languages) ☼ Church Planting ☼ Nehemiah Bible Colleges ☼ Gospel Printing Press ☼ Great Commission Partners ☼ St. Paul's Matriculation School ☼ Crusades ☼ Community Development

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

**ராஜாவாகிய ஏத்பாகாலின் குமாரத்தி யேசபேலை விவாகம்பண்ணினதுமல்லாமல், அவன் போய் பாகாலையும் சேவித்து அதைப் பணிந்துகொண்டு, தான் சமாரியாவிலே கட்டின பாகாலின் கோவிலில் பாகாலுக்குப் பலிபீடத்தை எடுப்பித்தான்''.**

(I இராஜாக்கள் 16: 30–32)

## 1. "மழைப் பெய்யாது" என்று சொன்னார்; மழைப் பெய்யவில்லை

ஒரு முறை எலியா தீர்க்கதரிசி ஆகாப் ராஜாவினிடத்திலே போய் "இந்த வருஷம் மழை பெய்யாது'' என்று தீர்க்கதரிசனம் சொன்னார்; மழை பெய்யவில்லை. இந்த எலியா தீர்க்கதரிசி மிக உன்னதமான மனிதர். தேவன் மேல் அசாதாரணமான நம்பிக்கை வைத்த ஒரு தெய்வீக மனுஷன். பின் விளைவை சிந்திக்காத ஆவிக்குரிய தைரியசாலி.

## 2. கீழ்ப்படிதல் உள்ள தீர்க்கதரிசி

ஆண்டவர், நீ இந்த இடத்திலிருந்து தப்பி ஓடி, **கேரீத் ஆற்றண்டையிலேப் போய் ஒளிந்துக் கொண்டிரு** (1 இராஜாக்கள் 17:3) என்றுச் சொன்னார். உடனடியாகக் கீழ்ப்படிந்தார். எதிர்த்துப் பேசாதபடி ஆண்டவர் சொன்ன ஆலோசனைக்குக் கீழ்ப்படிந்து கேரீத் ஆற்றண்டையிலேப் போய்த் தங்கியிருந்தார். ஆண்டவர் சொன்னபடி, காகங்கள் காலையிலும், மாலையிலும் அப்பமும், இறைச்சியும் கொண்டுக் கொடுத்தன. பின்னர் அந்த ஆற்றிலே தண்ணீர் வற்றிப்போய் விட்டது. ஆண்டவர் எலியா தீர்க்கதரிசியைப் பார்த்து "நீ போய் சாரிபாத் என்னும் ஊரிலே இருக்கும் ஒரு விதவையின் வீட்டிலேப் போய்த் தங்கு'' என்றுக் கட்டளையிட்டார். அதற்கும் எலியா கீழ்ப்படிந்தார். தனக்கென்று ஒரு கூட்ட ஜனங்களும் இல்லை. தனக்கென்று ஒரு எந்தவிதமான உலகப் பிரகாரமான உடைமைகளும் இல்லாத சூழ்நிலையில் எலியா கடந்துச்சென்றார். அங்குச் சென்ற போது, அங்கே ஒரு விதவையை சந்தித்தார். அங்கே அவளிடத்திலே தண்ணீரும், அப்பமும் கேட்டார். அந்த விதவை அவர் கேட்டதைக் கொடுத்தாள். அதினால் அவள் ஆசீர்வதிக்கப்பட்டாள். வியாதிப்பட்டு, மரணமடைந்த அந்த விதவையின் மகனை இந்த தேவ மனுஷன் உயிரோடே எழுப்பினார்.

## 3. தைரியசாலியான தீர்க்கதரிசி (1 இராஜாக்கள் 18 : 18–39)

மறுமுறை ஆகாப் இராஜாவினிடத்தில் எலியா தீர்க்கதரிசியை தேவன் அனுப்பினார் (1 இராஜாக்கள் 18:19–26). எலியா ஜனங்களை நோக்கி, "நீங்கள் எந்த மட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள்'' என்றார். அவர் ஜனங்களைப் பார்த்து "இப்போதும் இரண்டு காளைகளை எங்களிடத்தில் கொண்டு வாருங்கள்; ஒரு காளையை பாகாலின் தீர்க்கதரிசிகள் தெரிந்து கொண்டு, அதைச் சந்து சந்தாகத் துண்டித்து, நெருப்புப் போடாமல் விறகுகளின் மேல் வைக்கக்கடவர்கள். நான் மற்றக் காளையை அப்படியே செய்து, நெருப்புப் போடாமல் விறகுகளின் மேல் வைப்பேன். பாகாலின் தீர்க்கத்தரிசிகள் தங்கள் தேவனுடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடட்டும்; நான் கர்த்தருடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுவேன். அப்பொழுது அக்கினியினால் உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம்'' என்றார்; அதற்கு ஜனங்களெல்லாரும் "இது நல்ல வார்த்தை'' என்றார்கள். அப்பொழுது எலியா பாகாலின் தீர்க்கதரிசிகளை நோக்கி, "நீங்கள் அநேகரானதால் நீங்களே முந்தி ஒரு காளையைத் தெரிந்து கொண்டு அதை ஆயத்தம் பண்ணி, நெருப்பைப் போடாமல் உங்கள் தேவனுடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுங்கள்'' என்றார். தங்களுக்குக் கொடுக்கப்பட்ட காளையை அவர்கள் வாங்கி, அதை ஆயத்தம்பண்ணி, "பாகாலே, எங்களுக்கு உத்தரவு அருளும்'' என்று காலை தொடங்கி, மத்தியான வேளை மட்டும் பாகாலின் நாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டார்கள்; ஆனாலும் ஒரு சத்தமும் பிறக்கவில்லை, மறு உத்தரவு கொடுப்பாரும் இல்லை. அவர்கள் கட்டின பலிபீடத்திற்கு எதிரே குதித்து ஆடினார்கள். ஆனாலும் எதுவும் நடக்கவில்லை.

உடனே எலியா, வேறொரு பலிபீடத்தைக் கட்டி, அதைச் சுற்றிலும் ஒரு வாய்க்காலையும் உண்டாக்கி, விறகுகளை அடுக்கி, ஒரு காளையைச் சந்துசந்தாகத் துண்டித்து விறகுகளின் மேல் வைத்தார். பிற்பாடு அவர், "நீங்கள் நாலுகுடம் தண்ணீர் கொண்டு வந்து, சர்வாங்க தகன பலியின் மேலும், விறகுகளின் மேலும் ஊற்றுங்கள்'' என்றார்; இரண்டாந்தரமும் ஊற்றினார்கள்; அதற்குப் பின்பு "மூன்றாந்தரமும் அப்படியே ஊற்றுங்கள்''என்றார்; மூன்றாந்தரமும் ஊற்றினார்கள். அப்பொழுது தண்ணீர் பலிபீடத்தைச் சுற்றிலும் ஓடினது; வாய்க்காலையும் தண்ணீரால் நிரப்பினார்.

அந்திப்பலி செலுத்தும் நேரத்திலே, தீர்க்கதரிசியாகிய எலியா வந்து; "**ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் தேவனாகிய கர்த்தாவே, இஸ்ரவேலிலே நீர் தேவன் என்றும், நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும், நான் இந்தக் காரியங்களையெல்லாம் உம்முடைய வார்த்தையின்படி செய்தேன் என்றும் இன்றைக்கு விளங்கப் பண்ணும்**'' (1 இராஜாக்கள் 18:36) என்று ஜெபித்தார். அப்பொழுது: கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி, அந்த சர்வாங்க தகன பலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது. ஜனங்களெல்லாரும் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து, கர்த்தரே தெய்வம்! கர்த்தரே தெய்வம்! என்றார்கள். இப்படியாக எலியா ஆவிக்குரிய தீரமும், உண்மையுமுள்ள தேவ மனிதராயிருந்தார்.

நம் காலத்தில் இப்படிப்பட்ட சுயநலமற்ற தேவ ஊழியர்களையும், தீர்க்கதரிசிகளையும் காண்பது அரிதாக இருக்கிறது. தேவ தயவினால் ஏதாவது ஒரு இடத்தில் யாருக்காவது ஒரு சிறு அற்புதம் அல்லது தீர்க்கதரிசன நிறைவேறுதல் நிகழ்ந்து விட்டால் தாங்கள் அவர்களுக்காக ஜெபித்ததாகச் சொல்லி அவர்களைத் தேடி எத்தனை எத்தனை ஊழியர்கள் அவர்கள் வீட்டிற்குச் சென்று விடுகிறார்கள்? ஊழியர்களுடைய தொலைக்காட்சி உதவியாளர்கள் தங்கள் தொலைக்காட்சி உபகரணங்களுடன் அவர்கள் வீடுகளுக்குச் சென்று முகாமிட்டு, அவர்களை அசையவிடாமல் இருப்பது இல்லையா? இப்படியாக தொழில் ரீதியான தீர்க்கதரிசிகள்தான் அங்கும் இங்கும் உலாவிக் கொண்டிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து மத்தேயு 10:8–ல் "...இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய் கொடுங்கள்'' என்று சொன்னார்.

## II. எலிசா தீர்க்கதரிசி!

எலிசா என்று சொல்லப்படுகிற இந்த சாதாரண மனிதனை அவர் ஏர் ஓட்டிக் கொண்டிருக்கும் போது, எலியா தீர்க்கதரிசி சந்தித்து, தன்னைப் பின்பற்றும்படி அழைத்தார் (1 இராஜாக்கள் 19:19). இவர் யோராம், யெகூ, யோவாஸ் என்கிற இஸ்ரவேலின் பெரிய ராஜாக்களின் காலத்திலே பெரிய அற்புதங்களைச் செய்தார்.

எலியாவினிடத்தில் எலிசா ஊழியத்திற்கு வந்ததிலிருந்து எலிசா பயிற்றுவிக்கப்பட்ட முறைகள் மிகக் கடினமானவைகள். யார் யார் கடினமான உழைப்புக்கும், கடினமானப் பயிற்சிக்கும் தங்களை உட்படுத்தி, ஈடுபடுத்திக் கொள்கிறார்களோ அவர்கள்தான் உயர்ந்தவர்களாக வர முடியும். சரியான பயிற்சிக்கும், சரியான உழைப்புக்கும், சரியான நடவடிக்கைகளுக்கும் தங்களை ஒப்புக் கொடுக்க விருப்பமற்ற மக்கள், அரிய பெரிய காரியங்களைச் சாதிக்க முடியாது, ஞாயிற்றுக் கிழமை ஆலயத்துக்கு வருவதே பெரிய தியாகம் என்று கருதும் மக்கள் பெரிய தேவ ஊழியர்களாக மாற முடியாது.

## 1. தன்னை அழைத்தவருடன் முழு மனதுடன் ஒன்றித்து விட்ட எலிசா:

எலியா தீர்க்கதரிசியும், எலிசாவும் கில்கால் என்னும் இடத்தில் ஊழியம் செய்துக் கொண்டிருந்த காலத்திலே திடீரென்று எலியா, எலிசாவை நோக்கி, "நான் உன்னை விட்டு

பெத்தேலுக்குப் போகிறேன். நீ இங்கே இரு'' என்றுச் சொன்னார். ஆனால் இந்த எலிசா விடாப்பிடியாகத் தன்னை அழைத்தவரைப் பின் தொடர்ந்துச் செல்லத் தீர்மானித்தவராய், "நிச்சயமாக நான் உம்மை விடமாட்டேன். நான் இங்கே இருக்க மாட்டேன். உம்மோடுத்தான் வருவேன்'' என்று விடாப்பிடியாக சாதித்தது மட்டுமின்றி, எலியா தீர்க்கதரிசியை பின் தொடர்ந்தும் சென்றார்.

பிறகு இதே போராட்ட வாழ்க்கை தொடர்ந்து நடக்க, இருவரும் கில்காலிலிருந்து பெத்தேலுக்குப் போனார்கள்; பெத்தேலி லிருந்து எரிகோவுக்குப் போனார்கள்; பிறகு எரிகோவிலிருந்து யோர்தானுக்குச் சென்றனர். இந்த எல்லா இடங்களிலும் எலியா தனது உடன் ஊழியர் எலிசாவை ஆங்காங்கு விட்டுச் செல்ல முயற்சித்தார். ஆனால் எலிசாவோ தன் குருவாகிய எலியாவை விட்டுப் பிரிய சற்றேனும் இடம் தராமல் அவருடைய ஆவிக்குரிய நிழலில் உண்மையாய்த் தஞ்சம் புகுந்தார்.

யோர்தானிலும் சென்று, "நீ இங்கு இரு'' நான் யோர்தானுக்கு அக்கரைக்குப் போகிறேன் என்று எலியா சொன்னார். அப்பொழுது எலிசா "நான் இங்கேயும் இருக்க மாட்டேன்'', உம்மோடுக்கூட வருவேன் என்று சொன்னார். விடாப்பிடியாக உறுதியாக நின்று தான் எவராலே அழைக்கப்பட்டாரோ அவரோடுக் கூட உறுதியாய் நின்று யோர்தானின் அக்கரைக்கு இருவரும் போய் விட்டார்கள். அக்கரைக்குப் போவதற்கு முன்னதாக எலியா தீர்க்கதரிசி தன்னுடைய கையிலிருந்த சால்வையை எடுத்து யோர்தானை அடித்த வேளையிலே யோர்தான் நதி இரண்டாய்ப் பிளந்தது. இருவரும் யோர்தானுக்கு அக்கரைக்குப் போய்விட்டனர், அப்பொழுது, எலியா எலிசாவை நோக்கி, "நான் உன்னை இங்கு விட்டு விட்டு அக்கினி இரதத்திலே பரலோகத்திற்குப் போகப் போகிறேன். நான் உன்னை விட்டு எடுபட்டுப் போவதற்கு முன்னதாக நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டார்.

அப்பொழுது, எலிசா உம்மிடத்திலே இருக்கிற ஆவியின் வரம் இரண்டு மடங்கு எனக்கு வேண்டுமென்று கேட்டார். ஆனால் எலியா தீர்க்கதரிசி, "அரிதான காரியத்தைக் கேட்டாய்; நான் உன்னை விட்டு எடுத்துக் கொள்ளப்படும்போது, நீ என்னைக் கண்டால் அது உனக்குக் கிடைக்கும்'' என்றுச் சொன்னார். எலிசா கண்ணும் கருத்துமாக எலியாவை கவனித்துக் கொண்டிருந்தார். ஒரு குறிப்பிட்ட நேரம் வந்தது. அங்கே வானத்திலிருந்து அக்கினி இரதமும், அக்கினிக் குதிரைகளும் இறங்கின. அப்பொழுது எலியா தீர்க்கதரிசி அந்த அக்கினி இரதத்திலே ஏறி பரலோகம் சென்று விட்டார். "உம்முடைய ஆவியின் வரம் இரட்டிப்பாய் வேண்டுமென்று நான் கேட்டேனே'' என்று சொல்லி எலிசா கதறிப் புலம்பினார்.

(2 இராஜாக்கள் 2:11–13).

## 2. சோர்ந்து போகாத எலிசா:

பல இடங்களில் எலிசாவின் தகுதியும், எதிர்காலமும் எலியாவின் வார்த்தைகளாலும், செயல்களாலும், சோதிக்கப்பட்ட போதும், அவர் சோர்ந்து போகவேயில்லை.

**நீடிய பொறுமை உள்ளவர்களுக்கு கர்த்தர் உதவி செய்ய வல்லவராயிருக்கிறார். அவர்கள் ஒரு காலத்திலும், வெட்கப்பட்டுப் போவதில்லை.** உங்கள் வாழ்க்கையில் நடக்க வேண்டிய சில சம்பவங்கள் அந்தந்த நேரத்திலே நடக்காமல் போகும் போது நீங்களும் கூட மனம் கசந்துப்போய், "என்னுடைய ஜெபம் வீணாய்ப் போய்விட்டதே; என்னுடைய நாட்கள் வீணாய்க் கழிந்து விட்டதே; என்னுடைய பணம் பாழாய்ப் போய் விட்டதே; நினைத்தது ஒன்றும் நடக்கவில்லையே; இவ்வளவு தூரம் பாடுபட்டும், தேவனுக்கு ஊழியம் செய்தும் என்ன பயன்?'' என்றும்; உங்கள் முயற்சிகள் எல்லாம் தோல்வி யடைந்து போவதினாலே "ஆண்டவர் ஒருவர் இருக்கிறாரா'' என்றும் குழம்பி, நீங்கள் மனம் கலங்கி விட்டீர்களா? தைரியமாயிருங்கள். உங்கள் வாழ்க்கையிலும், எதிர்பாராத ஓர் அதிசயத்தை ஆண்டவர் கட்டாயம் செய்வார்.

காலங்கள் மாறும்! சூழ்நிலைகள் மாறும்!! ஆண்டவர் மாறாதவர்!!! எலியா தன்னை விட்டுவிட்டுப் பரலோகம் சென்று விட்ட நேரத்திலேயும், "என் தகப்பனே'' என்றுக் கதறினார். தன்னுடைய விசுவாசத்தை இழக்கவில்லை. தன்னுடைய நம்பிக்கையை இழக்கவில்லை. தன்னுடைய அழைப்பையும், தன்னுடைய தலையின் மேல் இருந்த அபிஷேகத்தையும் அவர் உதாசினப்படுத்தாத படி, வானத்தை நோக்கிப் பார்த்துக் கதறினார். இதை வாசித்துக் கொண்டிருக்கிற அருமை யான தேவனுடைய பிள்ளையே, எலியா பரலோகம் போனபின் அவர் மேல் இருந்த சால்வை கீழே விழுந்தது. அந்த சால்வையை எடுத்து யோர்தான் நதியிலே அடித்த வேளையிலே யோர்தானின் தண்ணீர் இரண்டாகப் பிளந்தது. யோர்தான் நதியிலி ருந்து எலிசா இக்கரைக்கு வந்தார். எலியாவைப் போல இரண்டு மடங்கு அற்புதங்களை அவர் செய்தார். பெரிய காரியங்களைச் சாதித்தார். நீங்கள் எப்போதுமே உங்களுடைய தகுதிகளை யும், எதிர்பார்ப்புகளையும் மட்டுப்படுத்தாதீர்கள்; குறைவாய் எண்ணாதீர்கள்.

## 3. நம் ஒவ்வொரு சிறு சிறு ஜெபத்திற்கும் நிச்சயம் பதில் உண்டு:

நாம் நம் தேவைகளுக்காக ஆண்டவரிடம் வேண்டுதல் செய்யும்போது நாம் எதிர்பார்க்கிற வழிகளில்தான் பதிலளிக்க வேண்டும் என்றக் கட்டாயம் அவருக்குக் கிடையாது. அவருக்கென்று ஒரு வழி இருக்கிறது. அவர் தாம் விரும்பும்

தொடர்ச்சி 6-ம் பக்கம்.....


# நெகேமியா வேதாகம மாலை நேரக் கல்லூரி

சேப்பாக்கம் & சந்தோஷபுரம், சென்னை

போதனா மொழி : தமிழ்

Registered Candidate for Membership
Asia Theological Association (ATA)

ATA — NEHEMIAH BIBLE COLLEGE — CHENNAI — Regd. Candidate for Membership — ECHO OF HIS CALL — Estd. 1969

ECHO OF HIS CALL 1969-2019 (ECHO GROUP)

உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 53 வருட அனுபவ ஸ்தாபனம்.

Certificate in Theology : ஒரு வருடம்
Diploma in Theology : இரண்டு வருடங்கள்

கல்வித்தகுதி : 10ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
உடனே அணுகவும் !

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS



**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் . 2022 ஜூலை 19 முதல் ஆகஸ்டு 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

ஜூலை 19 ⇨ சுவிசேஷம் சென்றடையாத இடங்களுக்கு சுவிசேஷம் சென்றடைய கர்த்தர் கிருபையாய் உதவி செய்தார்.

ஜூலை 20 ⇨ நமது ஊழியங்களை ஜெபங்களினாலும், பொருளாதாரங்களினாலும் ஆதரிப்பவர்களுக்காக கர்த்தரைத் துதிப்போம்.

ஜூலை 21 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக்கல்லூரி** மற்றும் **அஞ்சல்வழி வேதாகமக்கல்வி** ஆகியவற்றிற்காக கர்த்தரைத் துதிப்போம்.

ஜூலை 22 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்கள் குடும்பத்தையும் ஆசீர்வதித்து வருகிறதற்காக கர்த்தரைத் துதிப்போம்.

ஜூலை 23 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்களுக்காகவும், அவர்களின் குடும்ப அங்கத்தினர்களுக்காகவும் கர்த்தரைத் துதிப்போம்.

ஜூலை 24 ⇨ நமது தலைமை மற்றும் கிளைச்சபைகளையும், விசுவாசிகளையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருகிறார்.

ஜூலை 25 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் கர்த்தர் ஆசீர்வதித்தார்.

ஜூலை 26 ⇨ நமது பணியாளர்கள் அனைவரது குடும்பத்தினர் மீதும் கர்த்தருடைய ஆசீர்வாதம் பொழியப்பட்டதற்காக அவரைத் துதிப்போம்.

ஜூலை 27 ⇨ நமது உலகைக் காத்து வருவதற்காக கர்த்தரைத் துதிப்போம்.

ஜூலை 28 ⇨ ஜூன் 3, 2022 அன்று நடந்த நெகேமியா கல்லூரியின் பட்டமளிப்பு விழாவை ஆசீர்வதித்ததற்காக கர்த்தரைத் துதிப்போம்.

ஜூலை 29 ⇨ எழுப்புதலுக்குரிய புதிய விசுவாசிகளை ஆசீர்வதித்ததற்காக கர்த்தரைத் துதிப்போம்.

ஜூலை 30 ⇨ நெகேமியா முழுநேர மற்றும் மாலைநேரக் கல்விகளுக்கான புதிய மாணவர்களை கொடுத்ததற்காக கர்த்தரைத் துதிப்போம்.

ஜூலை 31 ⇨ நெகேமியா முழுநேரக் கல்லூரியின் அவசரத் தேவைகளான வாட்டர் கூலர், குளிர்சாதனப் பெட்டி, படுக்கை, போர்வை, பாய்கள், பாத்திரங்கள் முதலானவற்றை வாங்க கிருபை செய்ததற்காக கர்த்தரைத் துதிப்போம்.

ஆகஸ்டு 01 ⇨ நமது மாநில ஒருங்கிணைப்பாளர்களுக்காகவும் மற்றும் அவர்களது சமூகநிலைக்காகவும் கர்த்தரைத் துதிப்போம்.

ஆகஸ்டு 02 ⇨ நமது மிஷனரி ஊழியர்களின் பெரிதான அர்ப்பணிப்பிற்காக கர்த்தரைத் துதிப்போம்.

ஆகஸ்டு 03 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு**, புதிய அனுபவமிக்க ஆசிரியர்கள் கிடைத்ததற்காக கர்த்தரைத் துதிப்போம்.

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

ஆகஸ்டு 04 ⇨ நமது ஆங்கில இணை ஆசிரியர் **மனுவேல் மு. பால்ராஜ்** அவர்கள் மே, 25, 2022 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். அவர்களை இழந்து தவிக்கும் அவர்களது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்காக கர்த்தரை நோக்கி ஜெபிப்போம்.

ஆகஸ்டு 05 ⇨ சுவிசேஷம் சென்றடையாத இந்திய நாட்டின் பகுதிகள் அனைத்திற்கும் சுவிசேஷத்தைக் கொண்டு சென்றிட நமக்கு வாய்ப்பளிக்க வேண்டி கர்த்தரை நோக்கி ஜெபிப்போம்.

ஆகஸ்டு 06 ⇨ அனைத்து சமயங்களின் ஒற்றுமைக்காக தேவனிடத்தில் ஜெபிப்போம்.

ஆகஸ்டு 07 ⇨ உலகிலுள்ள நாடுகள் அனைத்திற்குள்ளாக சமரசம் நிலவிட ஜெபிப்போம்.

ஆகஸ்டு 08 ⇨ ஆண்டவரது இராஜ்யம் பூமியில் நிலைப்பட மேலும் கூடுதலான தரிசனங்களை நம்மிடத்தில் அருளவேண்டி ஜெபிப்போம்.

ஆகஸ்டு 09 ⇨ சகலவிதமான நிலைகளிலும் மற்றும் திட்டமிடுதலிலும் நமது நாடு ஒற்றுமையுடனும், முன்னேற்றத்துடனும் காணப்பட ஆண்டவரை நோக்கி ஜெபிப்போம்.

ஆகஸ்டு 10 ⇨ இன்று 54–வது வருடத்திற்குள் அடியெடுத்து வைக்கும் நமது ஊழியங்களுக்காக கர்த்தரை நோக்கி ஜெபிப்போம்.

ஆகஸ்டு 11 ⇨ ரஷ்யாவிற்கும், உக்ரேனுக்கும் இடையே நடைபெறும் போருக்காக மற்றும் உலகமனைத்திற்கும் சமாதானம் நிலவ ஜெபிப்போம்.

ஆகஸ்டு 12 ⇨ உலகமெங்கிலும் சமாதானம் நிலவிட அர்ப்பணிப்புடன் ஜெபிப்போம்.

ஆகஸ்டு 13 ⇨ நமது தலைமைப் போதகரது சுயசரிதை எழுதும் செயல்பாடு நிறைவாய் நிகழ்ந்திட ஜெபிப்போம்.

ஆகஸ்டு 14 ⇨ பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகள் நீங்க ஜெபிப்போம்.

ஆகஸ்டு 15 ⇨ நமது அனைத்து இணைஆசிரியர்களுக்காகவும், அவர்களின் புதிய பெலனுக்காகவும் ஜெபிப்போம்.

ஜூலை 16 ⇨ உலகமெங்கிலும் உள்ள கிறிஸ்தவ ஸ்தாபனங்களுக்காக ஜெபிப்போம்.

ஆகஸ்டு 17 ⇨ ஊழிய பணித்தளங்களில் ஊழியம் செய்யும் ஊழியர்களுக்காக ஜெபிப்போம்.

ஆகஸ்டு 18 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் நற்பணித் திட்டங்களுக்காக கர்த்தரை நோக்கி ஜெபிப்போம்.

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

வழியிலேதான் நமக்கு உதவிச்செய்வார். வங்கியிலே கடன் வேண்டுமென்றுச் சொல்லி நீங்கள் உபவாசமிருந்து ஜெபித்துக் கொண்டிருப்பீர்களேயானால் ஆண்டவர் வங்கிக் கடன் பெற உதவாமல் இருக்கலாம். மாறாக, உங்களுடைய தேவைகளை வேறொரு வழியில் சந்திப்பார்.

**டாக்டர் ரபீந்தர் போவாஸ்** என்ற எனக்கு அருமையான நண்பர் அறுவை சிகிச்சை மருத்துவர் சென்னையில் இருக்கிறார். அவர் மிகவும் தெய்வ பக்தியுள்ள, பண ஆசையில்லாத தேவ மனிதர். தேவ ஊழியரும் கூட. ஒரு முறை என் நண்பர் ஒருவருக்கு மூலவியாதி இருப்பதாக வேறொரு மருத்துவரால் கூறப்பட்டு அறுவைசிகிச்சைக்கு ஆயத்தமாகி என்னிடம் ஜெபிக்க வந்தார். பொருளாதாரத்தில் பின் தங்கியிருந்த அந்த நண்பருக்காக நானும் “இந்த மனுஷனை எப்படியாவது காப்பாற்றும்” என்று ஆண்டவரிடம் ஜெபித்தேன். மட்டுமின்றி நான் அந்த சகோதரனை முன்கூறிய தேவ ஊழியரான மருத்துவரிடம் அழைத்துச் சென்றேன்.

அந்த மருத்துவர், நோயாளியை பரிசோதிப்பதற்கு முன் ஒரு சிறு ஜெபத்தை செய்தார். பின்னர் நோயாளியைப் பார்த்து, “அறுவை சிகிச்சைத் தேவையில்லை”, அதற்கு மாறாக “தாராளமான தண்ணீர் குடியுங்கள்; கீரை சாப்பிடுங்கள்; வாழைப்பழம் சாப்பிடுங்கள்; ஒரு வாரம் பொறுத்து என்னை வந்து பாருங்கள்; சுகமடைந்து விடுவீர்கள்” என்று சொல்லி யனுப்பி விட்டார். வரும் வழியில், நோயாளியின் முகத்தில் எவ்வளவேனும் சந்தோஷம் இல்லை. ஏன் கவலையாயிருக்கிறீர்கள்? என்று நான் கேட்ட போது, “**ஆப்பரேஷன் நடக்கவில்லையே**” என்றார். அவருடைய எதிர்பார்ப்பு குறைந்த செலவில் வெற்றியான அறுவை சிகிச்சை நடப்பது மட்டுமே. நடந்தது என்னவென்றால், **அறுவை சிகிச்சை இல்லாமலேயே அவருக்குப் பூரண சுகம் கிடைத்தது.** இதில் பிரச்சினை என்னவென்றால் ஆரம்பத்தில் நல்ல ஒரு மருத்துவரை அணுகாமல், அறுவை சிகிச்சைக்குத் தன்னை ஆயத்தம் பண்ணி விட்டார். இப்பொழுதோ அவர் விருப்பம் நிறைவேறாததால் கவலைப்பட்டுவிட்டார்.

இது போலவே, நம் அறிவுக்கு எட்டியபடி ஆண்டவரிடம் நம் தேவைகளுக்காக ஜெபிக்கும் போது, அறிவுக்கெட்டாத, சொல்லி முடியாத அவருடைய ஞானத்தின்படியும், வல்லமையின்படியும், வேறு வழியில் நமக்கு அவர் சகாயம் செய்யலாம். அதை ஏற்க நம் மனம் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

எலிசாவின் வாழ்க்கையில், அவர் நீண்டகாலமாக ஆவலுடன் எதிர்பார்த்த **இரட்டிப்பான ஆவியின் வரத்திற்குப் பதில் ஒரு சால்வைத்தான் கிடைத்தது. அவர் தெய்வீக ஞானம் உடையவராயிருந்தபடியால் அந்த சால்வையை தன் நீண்டகால ஜெபத்திற்கு தேவனிடமிருந்து வந்த பதில் என்று நம்பி மனதார ஏற்றுக் கொண்டார்.** அன்பு தேவப் பிள்ளையே, உங்கள் மனநிலை எப்படி ?

## III. கேயாசி!

நாகமான் என்றுச் சொல்லப்பட்ட ஓர் படைத்தலைவனுக்கு ஒரு கொடிய வியாதி இருந்தது (2 இராஜாக்கள் 5:3). அவன் வீட்டிலே வேலை செய்த பெண்மணி தன்னுடைய நாச்சியார் மூலமாக எலிசா தீர்க்கதரிசியிடம் போனால், அவர் சுகப்படுத்தி விடுவார் என்று ஒரு ஆலோசனை சொன்னாள். அதன்படி நாகமான் எலிசாவினிடத்திலே வந்தான். அவன் எலிசாவின் வீட்டு வாசற்படியிலே நிற்கும்போது நீ போய் யோர்தானிலே ஏழுமுறை ஸ்நானம் பண்ணு; அப்பொழுது சுகமடைவாய் என்று, எலிசா தீர்க்கதரிசி சொன்னார். அதற்கு நாகமான் கடுங்கோபங் கொண்டு, வெளியே போய், “எலிசா தன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் தொழுது தன் கையினால் அந்த இடத்தைத் தடவி, இவ்விதமாய்க் குஷ்ட ரோகத்தை நீக்கிவிடுவார்” என்று எனக்குள் நினைத்திருந்தேன். நான் ஸ்நானம் பண்ணி சுத்தமாகிறதற்கு, இஸ்ரவேலின் தண்ணீர்கள் எல்லாவற்றைப்பார்க்கிலும் என் தேசத்தில் உள்ள நதிகள், நல்லதல்லவோ என்று சொல்லி, கோபத்தோடே திரும்பிப் போனான்.

## அவசர செய்தி
### உங்கள் கைபேசியின் தகவல்கள்!

**எங்கள் தொடர்பில் உள்ள நண்பர்களிடமிருந்து ஏராளமான வேத வசனங்களும் மற்றும் படங்களும் கைபேசி மூலமாக தினந்தோறும் எங்களிடம் வந்துசேருகின்றன. மெய்யாகக் கூறவேண்டுமெனில், எங்களால் அவை அனைத்தையும் பார்க்க இயலாது. வேறுவழியின்றி, எங்களது கைபேசிகளிலிருந்து அவற்றினை அழித்துவிட நேரிடுகின்றது.**

**எனவே, நாங்கள் நேசத்தோடும் மற்றும் மனங்கனிந்தும் தங்களை, இம்மாதிரியான படங்கள், செய்திகள் மற்றும் வேத வசனங்களை அனுப்ப வேண்டாம் என்று வேண்டிக் கொள்கின்றோம். மற்றபடி, தங்கள் சொந்த ஜெபக்குறிப்புகள் மற்றும் அவை சார்ந்த தகவல்களை உங்களிடமிருந்து பெரிய அளவில் எதிர்பார்க்கின்றோம்.**

**எங்களது இந்தத் தகவல் உங்களால் ஏற்றுக்கொள்ளப்படும் என்று நன்றியோடு எதிர்பார்க்கின்றோம்.**

**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்.**


# நெகேமியா வேதாகம முழு/மாலைநேரக் கல்லூரி, சென்னை.

வேளச்சேரி / சேப்பாக்கம் & சந்தோஷபுரம், சென்னை

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE (ECHO GROUP)

போதனா மொழி : இந்தி/தமிழ்

Regd. Candidate for Membership ATA NEHEMIAH BIBLE COLLEGE CHENNAI ★ ECHO OF HIS CALL ★ Estd.: 1969

*Registered Candidate for Membership*

Asia Theological Association (ATA)

உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 53 வருட அனுபவ ஸ்தாபனம்.

**Certificate in Theology : ஒரு வருடம்**

**Diploma in Theology : இரண்டு வருடங்கள்**

**கல்வித்தகுதி : 10ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்**

**உடனே அணுகவும் !**

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

அவனுடைய ஊழியக்காரர் அவனை நோக்கி, "தகப்பனே, அந்தத் தீர்க்கதரிசி ஒரு பெரிய காரியத்தைச் செய்ய உமக்குச் சொல்லியிருந்தால் அதை நீர் செய்வீர் அல்லவா? அவர் சொன்னபடி, ஸ்நானம்பண்ணும், அப்பொழுது சுத்தமாவீர் என்று அவர் உம்மோடே சொல்லும் போது, அதைச் செய்ய வேண்டியது எத்தனை எளிதானது" என்று சொன்னார்கள். அப்பொழுது அவன் இறங்கி, தேவனுடைய மனுஷன் சொன்ன வார்த்தையின்படியே யோர்தானில் ஏழுதரம் முழுகின போது, அவன் மாம்சம் ஒரு சிறு பிள்ளையின் மாம்சத்தைப் போல மாறி, அவன் சுகமானான்.

அப்பொழுது அவன் தன் கூட்டத்தோடு தேவனுடைய மனுஷனிடத்துக்குத் திரும்பி வந்து, அவனுக்கு முன்பாக நின்று, "இதோ இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத் தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்பதை அறிந்தேன்; இப்போதும் உமது அடியேன் கையிலிருந்து ஒரு காணிக்கை வாங்கிக் கொள்ள வேண்டும்" என்றான். அதற்கு எலிசா "**நான் வாங்க மாட்டேன்" என்றார். வாங்க வேண்டும் என்று அவரை வருந்தினாலும் எலிசா வாங்க மறுத்து விட்டார்**" (2 இராஜாக்கள் 5:11–16).

தேவனுடைய மனுஷனாகிய எலிசாவின் வேலைக்காரன் கேயாசி என்பவன், இதைப் பார்த்து, நாகமான் கொண்டு வந்ததை என் ஆண்டவராகிய எலிசா வாங்காமல் அவனை விட்டு விட்டார். "நான் அவன் பின்னாலே ஓடி, அவனிடமிருந்து ஏதாகிலும் வாங்குவேன்" என்று தீர்மானித்து, நாகமானைப் பின் தொடர்ந்தான்; அவன் தன் பின்னாலே ஓடி வருகிறதை நாகமான் கண்ட போது, "என்ன செய்தி" என்று கேட்டான். அதற்கு கேயாசி "இரண்டு சிறப்பு விருந்தினர்கள் திடீரென்று என்னிடத்தில் வந்தார்கள். அவர்களுக்கு **ஒரு தாலந்து வெள்ளியையும், இரண்டு மாற்று வஸ்திரங்களையும்** தர வேண்டும் என்று கேட்க என் எஜமான் என்னை அனுப்பினார்" என்று பொய் சொன்னான்.

அதற்கு நாகமான்; "தயவு செய்து இரண்டு தாலந்தை வாங்கிக்கொள்" என்று சொல்லி, அவனை வருந்தி, இரண்டு தாலந்து வெள்ளியை, இரண்டு பைகளில், இரண்டு மாற்று வஸ்திரங்களோடேக் கட்டி, அவனுக்கு முன்பாகச் சுமந்து போக, தன் இரண்டு வேலைக்காரர்களையும் அனுப்பினான். அவன் அதை அவர்கள் கையிலிருந்து வாங்கி, வீட்டிலே வைத்து விட்டு அந்த மனுஷரை அனுப்பி விட்டான்; அவர்கள் போய் விட்டார்கள். பின்பு அவன் உள்ளே போய்த் தன் எஜமானுக்கு முன்பாக நின்றான். "கேயாசியே, எங்கேயிருந்து வந்தாய்" என்று எலிசா அவனைக் கேட்டதற்கு, அவன் உமது அடியான் எங்கும் போகவில்லை என்றான். கேயாசி, தனது விருப்பத்திற்கு மாறாக நடந்ததை தன் ஞான திருஷ்டியின் மூலம் அறிந்து எலிசா வேதனைப்பட்டார்.

அப்பொழுது அவர் இவனைப் பார்த்து; **"அந்த மனுஷன் உனக்கு எதிர்கொண்டு வருவதற்காகத் தன் இரதத்திலிருந்து இறங்கித் திரும்புகிறபோது என் மனம் உன்னுடன் கூடச் செல்லவில்லையா? பணத்தை வாங்குகிறதற்கும்; வஸ்திரங்களையும் ஒலிவத்தோப்புகளையும் திராட்சத் தோட்டங்களையும்; ஆடு மாடுகளையும் வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கு இது காலமா? ஆகையால் நாகமானின் குஷ்டரோகம் உன்னையும் உன் சந்ததியாரையும், என்றைக்கும் பிடித்திருக்கும்" என்றார். உடனே அவன் உறைந்த மழை நிறமான குஷ்டரோகியாகி, அவர் சமூகத்தை விட்டுப் புறப்பட்டுப் போனான்** (2 இராஜாக்கள் 5:20–27).

கேயாசி என்ற ஊழியக்காரன் பின் வாங்கிப் போனான். ஊழியக்காரர் பட்டியலிலிருந்து அவன் பெயர் எடுபட்டுப் போயிற்று. அவன் சந்ததியே சாபத்துக்குள்ளாகியது. நீங்கள் யாரைப் போல மாற விரும்புகிறீர்கள்? **என்னிடத்திலே கேட்டால் நான் எலிசாவைப் போல மாற விரும்புகிறேன் என்றுச் சொல்லுவேன்.** எலிசாவினுடைய தலையிலிருந்த அதே அபிஷேகம் என்னுடைய தலையில் வந்து இறங்கட்டும் ஆண்டவரே. ஆண்டவரே இரட்டிப்பான நன்மைகளை நான் பெற்றுக் கொண்டு இந்த உலகத்திலே வெற்றி வாழ்க்கை வாழ வேண்டும் என்று வாஞ்சிப்பேன்.

சற்று யோசித்துப் பாருங்கள்! நீங்கள் எலியாவைப்போல் அழைக்கப்பட்டவரா? அல்லது எலிசாவைப்போல் அழைக்கப்பட்டு, வாழ்க்கை முழுவதும் ஆவியிலும், சரீரத்திலும், ஊழியத்திலும் எதிர்நீச்சல் போட்டுக்கெண்டு, அநுதின வாழ்க்கையின் சவால்களை

தொடர்ச்சி 9–ம் பக்கம்.....


அழைப்பின் எதிரொலி
தபால் வழிக் கல்வி

இந்திய மாணாக்கர்களுக்கு மட்டும்

## I. வேதாகமத் தபால் கல்வி

**தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.**

**"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.**

## II. அஞ்சல் வழி இறையியல் கல்வி

**ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம் ரூ.1000/– மட்டுமே.**

**மேலும் விவரங்களுக்கு :**

**தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**

10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, 2852 9293, 2854 7766
**கைபேசி: (+91) 98410 71852, 95661 31858**
**மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in**


## வருமான வரி விலக்கு

இந்தியா வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| **Account Name** | **: ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST** |
| **Account Number** | **: 1023 2923 805** |
| **Bank Name** | **: STATE BANK OF INDIA** |
| **Branch** | **: TRIPLICANE, CHENNAI - 600 005** |
| **IFSC Code** | **: SBIN 0000249** |
| **SWIFT Code** | **: SBI NIN BB 455** |



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

## பென்சில் பாய் ~ புதிய தலைமுறையினருக்கு ஒரு பழைய சரித்திரம்!!

## PENCIL MAT – An old history to the new generation

**"பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்" (நீதிமொழிகள் 22:6).**

ஒரு கிராம அரசினர் பள்ளியில் நான் 5ஆம் வகுப்பு முடித்ததும் என் பெற்றோர் உயர்நிலைப்பள்ளி ஒன்றில் என்னைச் சேர்த்தார்கள். அங்குதான் முதன்முதலாக ஆங்கில எழுத்துக்களைக் கற்றுத் தந்தனர். அங்கு நான் சென்ற முதல்நாளில், என் வகுப்பு ஆசிரியை, நாங்கள் அடுத்தநாள் பள்ளிக்கு வரும்பொழுது ஒரு பென்சிலும், நோட்டுப் புத்தகமும் கொண்டுவரும்படிச் சொன்னார்கள். நான் அன்று வீட்டிற்கு வந்தவுடனேயே, என் தகப்பனார் வெளியூர் சென்றிருந்ததால், என் தாயாரிடம் என் தேவையைக் கூறினேன். அவர்கள் எனக்கு வேண்டிய நோட்டுப்புத்த கங்களையெல்லாம் வாங்கிக் கொடுத்தார்கள். ஆனால் அவர்களால் ஒரு பென்சில் வாங்க முடியவில்லை. வீட்டினருகிலுள்ள எங்கள் உறவினர்களிடம் தன்னுடைய இயலாமையைக் கூற மனதில்லாமல் அவர்கள் என்னிடத்தில் உண்மை நிலையைக் கூறி, இயேசப்பாவிடம் என் தேவையைக் கூறி ஜெபிக்க அறிவுறுத்தினார்கள்.

அவர்கள் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, அன்று இரவு நான் முழங்கால் படியிட்டு எனக்கு ஒரு பென்சில் வேண்டும் என்று ஜெபித்துவிட்டு தூங்கச் சென்று விட்டேன். அடுத்தநாள் காலைவரை தேவன் எனக்கு எந்த பென்சிலையும் தரவில்லை. எனவே நான் பள்ளிக்கு பென்சில் இல்லாமலேயே சென்றேன். பள்ளியில் மற்ற மாணவர்கள் அனைவரிடமும் பென்சில் இருந்ததால் அவர்கள் ஆசிரியைக் கூறியதை யெல்லாம் எழுத முடிந்தது. எனக்கு மட்டும் அவ்வாறு செய்யமுடியவில்லை. அப்பொழுது ஆசிரியை நான் ஒன்றும் எழுதாமல் அமர்ந்தி ருந்ததைக் கவனித்து, என்னிடம் வினவினார் கள். அதற்கு நான் இயேசு கிறிஸ்துவிடம் ஜெபித்துள்ளதாகவும், பென்சில் எனக்காக இயேசுகிறிஸ்து அனுப்பியிருக்கிறார் என்றும் பதிலளித்தேன். ஆனால் அந்த ஆசிரியை கோபமடைந்து, என் தாயார் எனக்கு ஜெபிக்க அறிவுறுத்தியதை அறிந்து சற்று ஆத்திரமடைந்தார்கள். அடுத்தநாளில் நான் பென்சில் இல்லாமல் பள்ளிக்கு வரக்கூடாது என்றார்கள்.

மிகுந்ததுக்கத்துடன், இச்செய்தியை என் தாயாரிடம் சுமந்து சென்றேன். அதைக் கேட்ட என் தாயார், 'பென்சில் ஜெபத்தை' இயேசப்பா கேட்டதற்காக அவர்களுக்கு நன்றி சொல்ல கற்றுத் தந்தார்கள். அன்று நடுஇரவு வரை கர்த்தருக்கு நன்றி சொல்லிக் கொண்டே யிருந்தேன். ஆனால் அதன்பின் என்னால் தூங்கவே முடியவில்லை. அடுத்த நாள் பென்சில் இல்லாமல் பள்ளிக்குச் சென்றால் அங்கு எனக்குக் கிடைக்கவிருக்கும் தண்டனையை எண்ணிக் கலங்கினேன்.

அன்றைய இரவுநேரத்தில் யாரோ கதவைத் தட்டினார்கள். வீட்டில் ஆண்கள் இல்லாததை அறிந்து யாரோ திருட வந்திருக்கலாம் என்று என் தாயார் நினைத்து என்னை அமைதியாகத் தூங்கச் சொன்னார்கள்.

அந்த நடுஇரவில், என் தாயாரின் பெயரைச் சொல்லி கதவைத் தட்டினவர் கூப்பிட்டார். அது வேறுயாருமில்லை, எனது மாமாதான்! 70 கி.மீ. அப்பாலுள்ள பாளையங் கோட்டை என்ற ஊரில் காவல்துறை அதிகாரியாய் அவர் பணியாற்றி வந்தார். அவர் பெயர் திரு.செல்வமணி என்பதாகும். நாங்கள் சந்தோஷமாய்க் கதவைத் திறந்தோம். அவர் எப்போதும் போல எனக்கு பிஸ்கட், சாக்லேட் மற்றும் துணிமணி என்று பல பொருட்களை வாங்கி வந்திருந்தார். அவர் கொண்டு வந்த ஒரு பையை நான் திறந்தபோது அதற்குள் ஒரு பெட்டி இருந்தது. அதை ஆவலோடு நான் திறந்தபோது விலைகூடின அநேக **நடராஜ் பென்சில்கள்** அதற்குள் இருந்தன (நடராஜ் பென்சில்கள் அந்நாட்களில் மிகவும் விலையேறப்பட்டனவாய் இருந்தன). அந்த பெட்டிக்குள் 24 பென்சில்கள் இருந்தன.

அன்று இரவு நான் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தேன். ஏனென்றால் என் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என் ஜெபத்தைக் கேட்டது மட்டுமன்றி, அதற்கு பதிலும் அளித்துவிட்டார். என் சந்தோஷம் எனக்குள் பொங்கி வழிந்ததினால் என்னால் அன்று இரவு முழுவதும் என்னால் தூங்கவே முடியவில்லை.

அடுத்தநாள் காலையில், மற்ற மாணவர்கள் எல்லாம் ஒரு பென்சில் மட்டும் கொண்டு வந்திருக்க, நான் மட்டும் 24 பென்சில்கள் அடங்கிய பெட்டியையே பள்ளிக்குக் கொண்டு சென்றேன். எனது ஆசிரியை ஆச்சரியத்துடனும், வெட்கத்துடனும் அதைக் கண்டு என்னிடத்தில் நடந்ததை விசாரித்தார்கள். "நேற்று வந்து கொண்டிருந்த பென்சில் இன்று என் கையில் வந்து சேர்ந்துவிட்டது" என்று வெகுளித்தனமாய் நான் கூறினேன். என்னைத் தட்டிக் கொடுத்து, சந்தோஷத்துடன் அந்த ஆசிரியை எல்லோரையும் பார்த்து, "ஜீவனுள்ள தேவன் ஒருவர் இருக்கிறார். அவர் பெயர் இயேசு கிறிஸ்து", என்று அறிவித்தார்கள்!

எனதருமை வாசகரே, இச்சம்பவம் எனது சிறு வயதில் நடந்திருந்தாலும், அது இன்னும் என் மனதில் பசுமையாக இருக்கிறது. எனக்கு பென்சில்களைக் கொடுத்த தேவன் இன்றும் உயிரோடிருக்கிறார். "**அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்**" (எபிரெயர்13:8). எனது அறையில் ஒரு சிறிய பாய் (Mat) எப்போதும் தயார்நிலையில் விரித்து வைத்திருக்கிறேன். அதை 'பென்சில் பாய்' என்று அழைக்கிறேன். ஒவ்வொரு நாளும் அந்த 'பென்சில் பாயில்' அதிகாலை வேளையில் அமர்ந்து அல்லது முழங்காலில் நின்று ஜெபிக்கிறேன். எனக்கு அதிகவேலைப்பளு இருப்பினும் ஒருநாளில் 3 வேளை அதில் அமர்ந்து ஜெபித்து வருகிறேன். என் தேவைகள் அனைத்தையும் அதே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிடம் சொல்லி வருகிறேன். இதுவரை இந்த இயேசுகிறிஸ்துவிடமிருந்து சிறிய ஊசியிலிருந்து, அநேக வாகனங்கள், மிகப்பெரிய கட்டடங்கள் ஆகியவற்றை அந்த 'பென்சில் பாயில்' அமர்ந்துதான் ஜெபித்துப் பெற்றிருக்கிறேன். இதிலிருந்து நான் கற்றுக் கொண்டது என்னவென்றால்: **பரிசுத்த வேதாகமத்தைச் சுமக்கிற கைகளும், ஜெபிக்க முழங்காற்படியிடும் கால்களும் ஒருபோதும் தோல்வி அடைவதில்லை.**

எனவே, எனது கடந்த 53 ஆண்டு ஊழியப் பாதையில் பணம் சேகரிக்கும்

திட்டங்களை நான் மேற்கொண்டது இல்லை. சேகரிக்க எவருடைய வாசற்படியில் சென்று நிற்கவோ, நான் செய்யும் பல்வேறுவித ஊழியங்களுக்காக எந்த நபரிடமும் போய் கெஞ்சவோ முற்பட்டதில்லை. எனது **'பென்சில் பாயில்'** அமர்ந்தும், முழங்காலில் நின்றும் என்னை அழைத்த ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவிடம் மாத்திரமே கேட்டு என் எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்து வருகிறேன். நான் சென்னையில் இருந்து ஜெபிக்கும்போது வெகு தூரத்தில் இருக்கிற தேவமக்களிடம் அவர் பேசி, அவ்வப்போது எல்லாத்தேவைகளையும் சற்றும் தவறாமல் சந்தித்து வருகிறார். சரீர சுகம் அளிக்கிறார். என்னிடம் ஓர் சிநேகிதனைப் போல் பேசி அரவணைக்கிறார். அவரே எனக்கு இன்றும் போதுமானவராய் இருக்கிறார். கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார். நான் தாழ்ச்சிடையேன் (சங்கீதம் 23:1).

**“என்னைப் பெலப்படுத்துகிற இயேசுகிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு”** (பிலிப்பியர் 4:13).

***********

... 7-ம் பக்கத் தொடர்ச்சி

சமாளிப்பதே பெரிய காரியமாக இருக்கிறதா! அல்லது கேயாசியைப் போல ஏதாவது ஒரு நல்ல காரணத்தையோ, ஒரு நல்ல ஊழியத்தையோ சொல்லி எப்படியாவது பணம் வசூல் செய்யும் ஊழியத்தைச் செய்கிறீர்களா ?

இன்றைய சில ஊழியர்களின் பைகளில் வேதாகமமோ, வேத வசனக் கைப்பிரதிகளோ இருக்கின்றனவோ இல்லையோ கட்டாயம் பணம் வசூல் பண்ணுவதற்கான பட்ஜெட் பேப்பர் அல்லது விண்ணப்பம் அல்லது சில நோட்டீஸ்கள் அல்லது வாயில் அதற்காக மனப்பாடம் பண்ணப்பட்ட விவரங்கள் அடங்கியிருக்கும். பணம் என்றவுடன் அல்லது பணத்தைப் பார்த்தவுடன் எந்தப் **பரிசுத்த காரணத்தைக்** கூறி, பணத்தை தன் வசமாக்க முடியும் என்கிற யுக்தியை இன்றைய தேவ ஊழியர்கள் நன்குக் கற்று செயல்படுத்துகின்றனர்.

“ஊழியத்தின் செலவுகளுக்குப் பணம் தேவைப்படும்போது, எனக்கு இவ்வளவு பணம் கொடுங்கள்; நான் உங்களுக்காக கண்ணீரோடு ஜெபிப்பேன்; அப்பொழுது உங்களுக்கு நல்ல யோகம் அடிக்கும்” என்றோ 1000 ரூபாய் கொடுக்கக் கூடிய 750 பேர் முன் வாருங்கள் என்றோ, ஆண்டவர் என் முன் வந்து நின்று யார் யாருடைய வங்கியில் பணம் இருக்கிறதோ, யார் யாருக்கு பணி ஒய்வின் காரணமாக பெரிய தொகை வருகிறதோ அவற்றை எங்களுக்கு அனுப்புங்கள்; நாங்கள் 5 வருடம் பொறுத்து வட்டியில்லாமல் உங்களுக்கு பணத்தை அப்படியே திருப்பிக் கொடுத்து விடுவோம் என்றோ, இயேசு கிறிஸ்து தம் ஊழியர்களுக்கு **ஏமாற்றக் கற்றுக் கொடுக்காமல்** “கடலுக்குப் போய், மீன்களைப் பிடியுங்கள். மீனின் வாயில் வெள்ளிக் காசு இருக்கும்” என்று **ஊழியம் செய்ய கற்றுக் கொடுத்தார்** (மத்தேயு 17:27). **பலர் தவறான வழிகளில் பணம் பெற்று, ருசிக் கண்டு விட்டதால் அவர்களை இனி மேல் திருத்துவது மிகக்கடினம். தேவ ஊழியர்களே எச்சரிக்கையுடன் செயல்படுங்கள்.**

உண்மையாய் ஊழியம் செய்யும்போது, ஊழியத்தின் தேவைகளைச் சந்திக்க அலைய வேண்டியதில்லை. அதிக புத்திசாலித்தனத்தை பயன்படுத்த வேண்டியதும், புதிய புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தவும், பயன்படுத்தவும் வேண்டியதில்லை. நம்மை அழைத்தவர் உண்மையுள்ள தேவன். அவர் ஒரு போதும் தம்முடைய ஊழியர்களை கைவிடமாட்டார். தம்முடைய எந்த ஊழியத்தையும் உதாசினம் பண்ணவும் மாட்டார். ஆனால், அவருடைய ஊழியத்தை நாம் எந்த நோக்கத்தின் அடிப்படையில் செய்கிறோம் என்பதை அவர் கட்டாயம் கவனிப்பார்.

**அன்பு தேவப்பிள்ளைகளே, நீங்கள் உங்கள் மனதை எந்த விதத்தில் அமைத்துக் கொள்கிறீர்களோ, அதன் அடிப்படையில்தான் உங்கள் வாழ்க்கை அமையும்.**

**எலியாவைப் போல் தேவன் கொடுத்த வேலையை சிறிதானாலும், பெரிதானாலும் அவர் விரும்புகிற விதத்தில், பரிசுத்தமாய்ச் செய்து பரலோகம் செல்ல விரும்புகிறீர்களா ?**

**அல்லது**

**எலிசாவைப்போல் ஊக்கமாய் ஜெபித்து விடாப்பிடியாய் விசுவாசத்தைக் காத்து, அழைக்கப்பட்ட அழைப்பிலே உறுதியாய் நின்று, இரட்டிப்பான நன்மைகளைப் பெற்று, உங்கள் சத்துருக்களிலும் அதிக ஞானமுள்ள வர்களாகவும், உங்களுக்குப் போதிக்கிறவர் களைக் காட்டிலும் அறிவுள்ளவர்களாகவும், முதியோரைப் பார்க்கிலும், புத்திசாலிகளாகவும் (சங்கீதம் 119:98–100) மாற விரும்புகிறீர்களா ?**

**அல்லது**

**கேயாசியைப் போல ஊழியம் என்ற போர்வையில் கபடான எண்ணங்களுடன் பணத்துக்காக ஒடி அலைந்து, கடைசியில் தோல்வியடைந்து, ஊழியத்தையும் இழந்து உங்கள் சந்ததிக்கு சாபத்தைச் சம்பாதித்து வைக்க விரும்புகிறீர்களா ?**

**தீர்மானம் எடுப்பது உங்கள் விருப்பத்தைச் சார்ந்தது.**

**உங்கள் பதில் என்ன ?**

***********

## நம் பத்திரிகையின் அசாதாரண பங்களிப்பாளரான சிறந்த மனிதரை அழைப்பின் எதிரொலி நினைவு கூருகிறது !



கடந்த 43 வருடங்களாக **அழைப்பின் எதிரொலி** – ஆங்கில பத்திரிகையின் வளர்ச்சிக்கு உறுதுணையாளராக இருந்த

**சகோ. மனுவேல் மு. பால்ராஜ்**
**மூத்த துணை ஆசிரியர்**

அவர்கள் மே 2022, 25ம் தேதி, புதன் கிழமை காலை சுமார் 6.00 மணியளவில் தன்னுடைய 72–வது வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். அன்னாரின் மனைவி, மகன், மருமகள், மகள், மருமகன், பேரப்பிள்ளைகள், உறவினர்கள், மற்றும் நண்பர்கள் அனைவருக்காகவும் ஜெபிக்கவும். அவர்களுடைய சுகத்திற்காக பாரத்துடன் ஜெபித்த நம் சகோதர, சகோதரிகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்**

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/21-23 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/21-23

**அழைப்பின்எதிரொலி பத்திரிகையை**

**இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல் வாய்ப்பு**

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

Branch : **Triplicane, Chennai-5**
Name : **S. Sam Selva Raj**
A/C No. : **1023 2934 679**
IFSC : **SBIN 00 00 249**
SWIFT CODE : **SBI NIN BB 455**

### *2. Bank : ICICI Bank*

Branch : **Anna Salai, Chennai-6**
Name : **Echo of His Call**
A/C No. : **6038 0502 2319**
IFSC : **ICIC 000 6038**

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

Branch : **Triplicane, Chennai-5**
Name : **Echo of His Call Educational Trust**
A/C No. : **1023 2923 805**
IFSC : **SBIN 00 00 249**

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**
*****
E.mail : sam@echoofhiscall.org

# அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**வருட சந்தா ரூ. 100/–** **ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ அழைப்பின் எதிரொலி ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், தேவ பிள்ளைகளாகிய நீங்கள் விரும்பி அளிக்கும் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் தங்களை ஏவும் விதத்தில் தாங்கள் **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களைத் தாங்குங்கள். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram**, etc. மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**
**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**
தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858
**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**
**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

Regd. with the RNI under No. 67380/93
Licenced to post without pre-payment
Postal Regn. No. TN/CH/(C)/197/21-23
Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2021-23
Date of Publication: last week of previous month
Date of Posting : 27th & 28th of previous month
Posted at "Egmore RMS / 1 Patrika Channel"
on 28th JUNE 2022
If un-delivered please return to:
**ECHO OF HIS CALL (TAMIL)**
P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.
Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766

*JESUS LOVES YOU!*

To

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by him at **Echo of His Call Printers** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**